**தலைப்பு 421 – திறன் அபிவிருத்தி, தொழிற்சார் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு.**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்சார் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றைக் கொண்டமைந்த 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கியுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11(1) பிரிவு பிரகாரம் திறன் அபிவிருத்தி, தொழிற்சார் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய சாராம்ச அறிக்கை 2021 யூன் மாதம் 21 ஆந் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தில் 11(2) பிரிவு பிரகாரம் அமைச்சிற்கு ஏற்புடையதான வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 ஆந் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154 (6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவு பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுகிறது.

நிதிக் கூற்றுகளிலிருந்து 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில், திறன்கள் அபிவிருத்தி, தொழிற்சார் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுகள் தொடர்பாக கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிராகாரம், உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றறை தீர்மானித்தல் கணக்கு கொடுக்கும் அலுவலரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38 (1) (இ) உபபிரிவு பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான பயனுள்ள உள்ளக நிருவாக முறைமை தயாரித்து பராமரிக்கப்படுவதாக கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்த வேண்டுமென்பதுடன், குறித்த முறைமையின் பயன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதன்படி முறைமையை பயனுள்ளதாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை முன்னெடுத்தல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளா் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயா் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கு கொடுக்கும் அலுவலரை அறிவுறுத்தப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்துடனான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6(1) (ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை குறிப்பிடுகின்றேன்.

திறன்கள் அபிவிருத்தி, தொழில்சார் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு புதிய அமைச்சு ஆவதால் கடந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த மதிப்பீடுகள் மூலம் ஒதுக்கீடுகள் அளிக்கப்பட்டிருந்த 10 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக ரூபா. 184,850,000 ஆன ஒதுக்கீடுகளிலிருந்து எந்தவொரு பணத் தொகையும் பயன்படுத்தியிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் காரணமாக இந்த கருத்திட்டம் பொருட்டு பெறுகை மேற்கொள்ள இயலாமையும், எதிர்பார்க்கப்பட்டவாறு இரசீதுகளை சமர்ப்பிக்காமையும் காரணமாக திட்டமிட்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு இயலாமையால் இந்த ஒதுக்கீடுகள் எஞ்சியுள்ளன. | நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஏற்பாடு செய்துள்ள ஒதுக்கீடுகளை ஆகக் கூடிய வகையில் பயண்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆராய்ச்சி மற்றும் புதிய உற்பத்தி பிரிவின் 03 செலவு விடயங்களுக்கு ஏற்புயைடதாக குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் ஒதுக்கீடு செய்துக் கொண்ட மொத்தம் ரூபா. 12,260,000 ஆன ஒதுக்கீடு முற்றுமுழுதாக எஞ்சியுள்ளது. | அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான நிகழ்ச்சித்திட்டம் முற்றுமுழுதாக வேறு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டமை காரணமாக, சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுக்கான ஒதுக்கீடுகளை கோரியுள்ளதுடன், ஏற்பட்ட தாமதம் காரணமாக ஆண்டு இறுதியில் சீராக்குதல்களை மேற்கொள்கையில் மீதி தொகை காணப்படுகிறது. | தேவை சரியாக அடையாளம் காணப்பட்டு மேலதிக ஒதுக்கீடுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| **(இ)** | சம்பந்தப்பட்ட நோக்கங்கள் மற்றும் பணிகளில் உரியவாறு நிதி பயன்படுத்தாமை காரணமாக 16 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதான ஒதுக்கீடுகளில் 34% தொடக்கம் 75% வரையிலான எல்லைக்குள் மீதிகள் காணப்பட்டன. | திருத்தம் செய்த மதிப்பீடுகளிலிருந்து வழங்கிய ஒதுக்கீடுகளின் ஊடாக திட்டமிடப்பட்ட வகையில் செலவினங்களை மேற்கொள்வதற்கு முடியாமை காரணமாக மிகை ஒதுக்கீடு ஏற்பட்டுள்ளது. | ஒதுக்கீடுகளை ஆகக் கூடிய மட்டத்தில் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

## 2.2 முற்பணக் கணக்கின் மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| அலுவலர்கள் சேவை விட்டு சிலகிச் செல்லுதல் மற்றும் ஓய்வு பெறுதல் காரணமாக 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்படாத ரூபா. 522,270 ஆன நிலுவை கடன் மீதி காணப்பட்டதுடன், நிலுவையாக காணப்பட்ட காலம் 02 ஆண்டுகள் தொடக்கம் 20 ஆண்டுகள் வரையாகும். | ஓய்வு பெறச் செய்விப்பதற்காக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய கடன் மீதி தொடர்பில் சட்டத்துடனான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | உரிய சுற்றுநிருப ஏற்பாடுகளின் படி நடவடிக்கை மேற்கொண்டு நிலுவை கடன் மீதி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஏப்ரல் 21 ஆந் திகதிய **255/2017** ஆம் இலக்க அரச கணக்கு சுற்றுநிருபம் மற்றும் நிதி ஒழுங்குவிதி 94(3) இல் ஆலோசனைகளுக்கமையாத வகையில் செயற்படல் காரணமாக ஆண்டு இறுதியில் 07 விடயங்களுக்கு ஏற்புடையதாக எஞ்சியதை விஞ்சி ரூபா. 584,400 ஆன பொறுப்புகளை மேற்கொள்ளப்பட்டது. | அரச கணக்கு நடைமுறைகளின்படி அட்டுறு அடிப்படையில் கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருப்பினும், திறைசேரி ஒதுக்கீடுகள் அதற்கு மேற்கொள்ளப்படாமையாலும், வழங்கிய ஒதுக்கீடுகள் வரையறுக்கப்பட்டிருந்தமையாலும், இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது. | சுற்றுநிருபங்கள் மற்றும் நிதி ஒழுங்குவிதி ஆலோசனைகளுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | அரச கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 255/ 2017 இன்படி எல்லா பொறப்புகளையும் அட்டவணைப்படுத்த வேண்டுமாயினும், மொத்தம் ரூபா. 189,770 ஆன பொறுப்புகளை, பொறுப்புகள் அட்டவணையில் உள்ளடக்கப்படவில்லை. | நாட்டில் நிலவுகின்ற தொற்று நோய் நிலைமை காரணமாக இந்த இரசீதுகளை பின்னராக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | எல்லா பொறுப்புகளையும் குறிப்பு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி ஒழுங்குவிதி 571(2) பிரகாரம் 2017 மற்றும் 2018 ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக 02 ஆண்டுகள் விஞ்சிய ரூபா. 301,312 ஆன வைப்புகளை அரச வருமானக் கணக்கில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை பொது வைப்புக் கணக்கில் காணப்பட்டது. | அரச வருமானக் கணக்கில் எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சின் கீழ் உள்ள தொழில்சார் பயிற்சி நிலையங்களில் நடைமுறைப்படுகின்ற சில கற்கைநெறிகளின் பொருட்டு மாணவர்களை கவரச் செய்வதற்கு முறையான நிகழ்ச்சித் திட்டம் இருக்காமை காரணமாக மாணவர்களின் பங்களிப்பு ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதன் பிரகாரம் ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு போதியளவிலான கொள்ளளவு மற்றும் தேவையான எல்லா வசதிகளும் வழங்கப்பட்டிருக்கையில் அந்த வளங்களை பயனுள்ளவாறும் வினைத்திறனாகவும் பயன்படுத்தாமை காணப்பட்டது. | அமைச்சுக்கான தொழில்சார் பயிற்சி நிலையங்கில் நடைமுறைப்படுகின்ற கற்கைநெறிகளுக்கிடையில் பொதுவாக மாணவர்களின் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் காணப்படும் காற்கைநெறிகள் எவையெனில், NVQ **3,4** மட்டத்திலான வாயு , அணுவில் உருக்கிணைப்பு, இயந்திரங்கள், நீர் குழாய் பழுதுபார்ப்பவர், கட்டுமான வேலை பார்ப்பவர்கள், மர வேலை செய்பவர், குளிர்சாதனம் மற்றும் வளிப்பதனாக்கி ஆகிய கற்கைநெறிகளாகும். தற்கால கைத்தொழில் துறையில் அதிக கேள்வி நிலவிய போதும், இந்த கற்கைநெறிகளின் பொருட்டு சமூக ரீதியாக காணப்படும் குறைந்த மட்டத்திலான ஏற்றுககொள்ளுதல் காரணமாக மாணவர்களின் பங்களிப்பு குறைந்துள்ளது. | ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவளவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| **(அ)** | ஆராய்ச்சி மற்றும் புதிய உற்பத்தி துறையில் மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக முன்னேற் அறிக்கை பிரகாரம் மொத்தம் ரூபா. மில்லியன் 784.36 ஆன 14 கருத்திட்டங்கள் ஆரம்பித்து முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், குறித்த கருத்திட்டங்களின் முன்னேற்றம் 34% தொடக்கம் 89% வரையிலான காலவெல்லைக்குள் | இந்தக் கருத்திட்டங்கள் கருத்திட்டங்களாக இல்லாது நிகழ்ச்சித்திட்டங்களாக அடையாளம் காணலாம் என்பதுடன், அதில் 11 நிறுவனங்களுக்கு கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடுகளை பயன்படுத்தி நிறுவனத்தின் வருடாந்த திட்டம் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்பட்டவைகளாகும்.<br><br>இவற்றின் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமைக்கு | எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தை ஆகக் கூடிய மட்டத்தில் பெற்றுக்கொள்வதற்கு செயற்படல் |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன், முன்னேற்றம் 75% இற்கும் பார்க்க குறைந்த கருத்திட்டங்கள் 11 நிலவியமை அவதானிக்கப்பட்டது. | பல்வேறு காரணங்கள் நிலவுகின்றன. | |
| **(ஆ)** | 2018 ஆம் ஆண்டில் சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு அந்த ஆண்டு முடிவில் முடிவுறுத்தப்படவிருந்த, ரூபா.மில்லியன் 80 ஆன செலவின Social Innovation Lab கருத்திட்டம் மற்றும் ரூபா.மில்லியன் 70 ஆன செலவின Improving Degraded Soil என்ற கருத்திட்டங்களில் முன்னேற்றம் மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் ஒழுங்கு முயைில் 70% மற்றும் 64% ஆகும். | இந்தக் கருத்திட்டம் பல வருடங்கலாக மேற்கொள்கின்ற கருத்திட்டமாவதுடன், 2020 ஆம் ஆண்டின் இலக்கு 15% ஆவதுடன், அதில் 90% அதாவது 15% இல் **14%** நிறைவு செய்து கொள்வதற்கு முடிந்தது. முன்னரான ஆண்டில் 50% இற்கு பெறமதி சேர்க்கப்பட்ட பின்னர் 64% ஆகும். எஞ்சியதை மேலும் பல ஆண்டுகளில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்படுதல். | எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்வதற்கு செயற்படல். |

## 3.3 கருத்திட்டங்கள் முடிவுறுத்துவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆராய்ச்சி மற்றும் புதிய உற்பத்தி துறைகளுக்கு ஏற்புடையதாக 2020 ஆம் ஆண்டில் 03 கருத்திட்டங்கள் பொருட்டு ரூபா.111 மில்லியன் ஒதுக்கீடுகள் ஒதுக்கீடு செய்திருப்பினும், கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தாமை காரணமாக மொத்த ஒதுக்கீட்டு தொகையும் எஞ்சியிருந்தது. | நிலைமை அவ்வாறாக இருப்பினும், சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களின் பொருட்டு ஒதுக்கீடுகளை எதிர்பார்க்கப்பட்டவாறு செலவு செய்வதற்கு இயலாது போனமைக்கு பல காரணங்கள் உள்ளன. | ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | சமுத்திர பல்கலைக்கழகத்தில் தரத்துடன் கூடிய பட்டப்படிப்பு கற்கைநெறிகளை நடைமுறைப்படுத்துவதற்கு இடவசதிகளுடன் கூடிய வளாகத்தை உருவாக்கும் நோக்கத்தில் புதிய அபிவிருத்தி பொருட்டு கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் (KOIKA) கடன் வசதிகளை வழங்குவதற்கு முன்வந்திருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டு தொடக்கம் அதற்கு பொருத்தமான காணி கையகப்ப- | சமுத்திர பல்கலைக்கழகம் மற்றும் நீரியல் வளங்கள் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு உரிய **(NARA)** காணிப் பகுதி தெரிவு செய்யப்பட்டதுடன், கொரிய நாட்டு அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் நிருமாணிப்பதற்கான சாத்தியவள கற்கை அறிக்கை தயாரித்து தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் **(NPD)** முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்-போது கிடைக்கப்பெற்ற ஆலோச-னைகளுக்கமைவாக கட்டுமான பணிகளை | கருத்திட்டங்களை துரிதமாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | |
|---|---|
| டுத்தாமை காரணமாக மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | மேற்கொள்வதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய சுற்றாடல் **(EIA)** மதிப்பீட்டு அறிக்கை தற்போது தயாரிக்கப்படுகிறது. |

### 3.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| **வாகன உபயோகம்**<br>பெறுமதி ரூபா.மில்லியன் **39.6** ஆன 11 வாகனங்கள் ஓராண்டுக்கு குறைந்த காலப்பகுதிக்குள் குறைபயன்பாட்டுடனும், பயனற்றும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | அமைச்சின் விடயவெல்லை அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டமையாலும், தற்போது நிலவும் கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான வாகனங்களை மட்டும் பயன்படுத்தப்படுகிறது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். | வாகனங்களிடமிருந்து ஆகக் கூடிய பயனை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.5 அரசாங்க அலுவலர்களின் பிணை வைப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி ஒழுங்குவிதி 891 இன் பிரகாரம் அமைச்சினால் பிணை ஆவணம் பராமரித்தல் வேண்டும். | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் அமைச்சினால் பிணை ஆவணம் எதிர்காலத்தில் பராமரிப்பதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 03/2020 இற்கு முரணாக 2020 யூலை 15 ஆந் திகதியில் கொண்டாடப்படுகின்ற உலக இளைஞர் திறன் திகதி பொருட்டு, மாகாண மட்டத்தில் தொழில்சார் பயிற்சி பெறுகின்ற மாணவர்களின் திறன் மற்றும் புதிய ஆக்கப்படைப்பு போட்டியினை (Touch | Covid **19** தொற்று நோய் நிலைமை காரணமாக மார்ச் மாதம் இரண்டாவது வாரத்தில் நாடு மூடப்பட்டது. ஆகையால் இந்த போட்டியின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு முடியவில்லை. | சுற்றுநிருபங்களின் ஆலோசனைகளுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

Your Future) நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு, அதற்கான பத்திரிக்கை அறிவிப்பு வெளியிடுவதற்கு ரூபா. 1,777,707 செலவிடப்பட்டிருப்பினும், அந்த போட்டி நடாத்தப்படாமை காரணமாக மேற்கொண்ட குறித்த செலவினம் சிக்கனமற்ற செலிவனமாக காணப்பட்டது.

**3.7 முகாமைத்துவ குறைப்பாடுகள்**

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறன் திகதி கொண்டாடப்படும் வைபவத்தின் முன்னரான பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் வைபவம் ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகள் திட்டமிடுவதற்காக ரூபா.3,443,100 ஆன தொகை திறன் துறைசார் அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் வழங்கியிருந்ததுடன், அதில் ரூபா. 1,705,000 ஆன செலவினம் மேற்கொண்டு 22 வீடியோ பதிவுகளை உருவாக்கப்பட்டிருப்பினும், அவற்றை பிரச்சாரப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அதில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றப்படவில்லை. | **2020** உலக இளைஞர் திறன் திகதி – முன்னரான மற்றும் பின்னரான பிரச்சார குழுக் கூட்டங்களின் அறிக்கை பிரகாரம், 02 நிமிடங்களிலான வீடியோ பதிவுகளை உலக இளைஞர் திறன் திகதிக்கு முன்னர் அதாவது யூலை **11**, **12**, **13**, **14** ஆகிய திகதிகளில் சமூக ஊடகங்களுக்கு வழங்கியுள்ளதுடன், திறன் திகதி கொண்டாடும் வைபவமும் கொவிட் 19 தொற்று நோய் நிலைமை மத்தியில் மேற்கொண்ட வைபவமாவதால், எதிர்பார்க்கப்பட்டவாறு பிரச்சார நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. ஆயினும், இந்த தொற்று நோய் நிலைமை முடிவடைந்த பின்னர் குறித்த வீடியோ பதிவுகளை மேலும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | திட்டமிடப்பட்ட பணிகளை தாமதமின்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 42.5 யூரோ மில்லியன் தொகையிலான கடன் நன்கொடையின் கீழ் ஹிங்குரக்கொடை பிரதேசத்தில் 05 பயிற்சி பாடசாலைகளைக் கொண்டமைந்த தேசிய தொழில் பயிற்சி நிலையம் நிருமாணிக்கும் அடிப்படை நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டில் நிரல் வரிசை அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் 18 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தால் விரிவான சாத்தியவள கற்கை மேற்கொள்வதற்கும் வேறு | இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் தலைவர் அவர்களால் 2015.11.03 ஆந் திகதிய கடிதத்துடன் முன் வைக்கப்பட்ட கருத்திட்ட பிரேரணை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2017.03.28 ஆந் திகதி அமைச்சரவையிடம் கிடைக்கப்பெறுகையில் Gemco International Engineering & Contracting நிறுவனத்தால் சாத்தியவள கற்கை மேற்கொள்ளப்பட்டதுடன், குறித்த சாத்தியவள கற்கை இதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | தேவையினை சரியாக அடையாளம் காணப்பட்டு கருத்திட்டங்களை ஆரம்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அமைச்சரவை தீர்மானம் படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சமமான கருத்திட்டங்களுடன் ஒப்பீட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் அமைச்சு செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பினும், அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளாது அமைச்சு செயலாளரால் ஒப்பந்த நிறுவனங்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |

**4. நிலைபேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்ளுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| இந்த நிலைபேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்வதற்காக 2015 – 2030 வரையிலான காலவெல்லை பெயரிடப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் 2017 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேண்தகு அபிவிருத்தி சட்டத்தில், திறன் அபிவிருத்தி, தொழில்சார் கற்கை, ஆராய்ச்சி, மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சிற்கு ஏற்புடையதான நோக்கங்களின் மீது இரண்டு பிரிவுகளாலும் கவனம் செலுத்தப்பட்டு குறித்த இலக்குகளை அடையாளம் காணப்பட்டிருப்பினும், நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மீளாய்விற்கான ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட வகையில் அடைந்துகொள்ளவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | நிலைபேண்தகு அபிவிருத்தி நோக்கங்களையம் இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**5. மனித வளங்களின் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் அமைச்சின் பணியாற்றொகுதியில் 201 வெற்றிடங்கள் உள்ளதாக அவதானிக்கப்பட்டது. | பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு முயற்சி எடுத்துள்ளதுடன், வெற்றிடங்கள் உள்ள பதவிகளின் பொருட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் பொருத்தமான அலுவலர்களை வழங்காமை காரணமாக குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு இயலாதுள்ளது. | சேவையின் தேவைகளை கவனத்தில் கொண்டு அத்தியாவசிய வெற்றிடப் பதவிகளை பூர்த்தி செய்து அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |